C I M A.
Stage: II & III
I. D. P. M. Part I
Classes commencing on
25-7-87 at 8-30 a. m.
North Ceylon
Technical
Institute
14th St. Peters Lane
JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

I. A. B
INTER & FINAL
வகுப்புக்கள் ஆரம்பம்
22-7-87 9-30 மணிக்கு
North Ceylon
Technical
Institute
14, St. Peters Lane
JAFFNA.

சுடர் 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி மீ 4 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 துல்ஹஜ் பிறை 23 (20 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 201

கருத்தரங்கில் கல்விமான்களின் எண்ணச் சிதறல்

# அரசமைப்பை மாற்றுமல் கொண்டு வரும் எந்தத் தீர்வும் தமிழருக்கு நன்மை தராது

## பேச்சுவார்த்தை மூலம் முடிவுகாண ஆயுதப் போராட்டம் பலம் தரும்

— உதயன் செய்தியாளர் கே. எஸ். ராஜு —

யாழ்ப்பாணம், ஜூலை 20

★ இப்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தை மாற்றுமல் அதன் கீழ் கொண்டு வரப்படும் எந்தத் தீர்வும் தமிழ் மக்களுக்கு நன்மை தரப்போவதில்லை.

ஒற்றையாட்சி அரசமைப்புக் கிழித்தெறியப்பட்டு, புதிய சமஷ்டி அரசமைப்பு இயற்றப்பட வேண்டும். அதன் மூலமே எமது பிரச்சினைக்கு ஓரளவேனும் தீர்வு காணமுடியும்.

★ பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு ஆயுதப் போராட்டம் பலம் தருவதாகவும் உந்து சத்தியாகவும் விளங்கும்.

யாழ் பல்கலைக்சழக கைலாசபதி அரங்கில் வணிக மன்றம் ஏற்பாடு செய்த ''டிச 19 யோசனைகள்'' பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய கல்விமான்கள் எடுத்துரைத்த கருத்துக்களில் முன்கண்டவை முக்கியமான இரண்டு கருத்துக்களாகும்.

கருத்தரங்கில் நிகழ்த்தப்பட்ட உரைகளைக் கேட்பதற்காக பலதுறைகளையும் சேர்ந்த அறிஞர்களும், கல்விமான்களும், சாதாரண மக்களும் மண்டபம் நிரம்பி வழியும் அளவுக்குக் கூடியிருந்தனர்.

கருத்தரங்கில் சில கல்விமான்கள் முன்வைத்த முக்கியமும், புதியதுமான சில பகுதிகளை இங்கே தருகிறோம்:-

வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கலாநிதி சி.க. சிற்றம்பலம் பேசுகையில் தெரிவித்ததாவது--

தற்போதைய அரசியல் அமைப்பு முற்றுமுழுதாகக் கிழித்தெறியப்பட்டு, புதிய அரசியல் நிர்ணய சபை மூலம் சமஷ்டி அரசியல் அமைப்பு ஆக்கப்பட வேண்டும்.

அதன் கீழ் தான் எமது பிரச்சினைக்கு ஓரளவாவது தீர்வுகாணமுடியும்.

கடந்த கால் நூற்றுண்டு காலமாக தமிழ் மக்களது உரிமைகளை விலைபேசி விற்காது பாதுகாத்த வரலாற்று உண்மைகள் தந்தை செல்வநாயகத்தின் தலைமையின் கீழ் இயங்கி வந்த தமிழரசுக் கட்சியாலும், அதன்பின் உருவான கூட்டணியாலும் நிலைநாட்டப்பட்டவை என்பதனை நாம் புறக்கணித்துவிட முடியாது. அதேநேரம் ஒரு கால கட்டத்தில் தமிழ் மக்களது சுய நிர்ணய உரிமைகளைப்பற்றிப் பேசி அதிகாரம் பெற்ற பின்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சியிலும் தலையாட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை20

வடமராட்சி இராணுவ முகாம்களிலும் முகமூடி தலையாட்டி மனிதர்கள் தோன்றியுள்ளனர்.

வடமராட்சியில் இராணுவத்தின் விசேட அடையாள கார்ட் பெறச் செல்லும் பலர் முதலில் தலையாட்டி மனிதரின் முன் பார்வைக்கு நிறுத்தப்படுகின்றனராம். (உ-10)

### இராணுவப் படையின் தலைமைப் பீடத்தில் பல பதவி மாற்றங்கள்

கொழும்பு, ஜூலை 20

வட வகுதி இராணுவ இணைப்பதிகாரியாக பிரிகேடியர் ஜனதா ஜெயரட்ன நியமிக்கப்பட இருக்கின்றார்.

புதிய நியமனம் எந்த நேரத்திலும் பாதுகாப்பு அமைச்சினால் அறிவிக்கப்படும்.

தற்போதைய இணைப்பு அதிகாரியான பிரிகேடியர் ஜெரிசில்வா, கொழும்பில் உள்ள கூட்டுப்படைத்தள அலுவலகத்தில் இரண்டாவது உயர் அதிகாரியாகப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சந்தோஷத்தில் மிதந்த சிப்பாய்கள்

யாழ்ப்பாணம் ஜூலை 20

அப்பப்பா சிப்பாய்களுக்கு ஏற்பட்ட சந்தோசத்துக்கு அளவேயில்லை!

இனப்பிரச்சினைக்கான யோசனைகளின் முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாக பத்திரிகையில் வெளிவந்த செய்தியினை அடுத்து சிப்பாய்கள் பெருமகிழ்ச்சியுடன் காணப்பட்டனராம்.

வவுனியாவில் உள்ள சிப்பாய்கள் இந்தச் செய்தியை அடுத்து தமது முகாமைக்கடந்து செல்

( 4ஆம் பக்கம் பார்க்க)

### பிந்திய யோசனை குறித்து அமைச்சரவையில் நடந்தது என்ன?

கொழும்பு, ஜூலை20

பிந்திய யோசனைகளை ஏற்றுக் கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை அரசு சம்மதிக்குமானால் இலங்கையில் தீவிரவாதத்தை ஒழித்து, அதன் பாதுகாப்பை இந்தியா உறுதிப்படுத்தும்.

- இப்படி இந்தியா அறிவித்துள்ளதாக கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பிந்திய யோசனையின் படி-

★ வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்டு ஒரு மாகாணசபையாக இயங்கும்.

★ திருகோணமலைத் துறைமுகப் பிரதேசம் கொழும்பு அரசினால் நிர்வகிக்கப்படும்.

★ ஒரு மாகாண சபை நிர்வாகத்தில் தொடர்ந்து செயல்பட விருப்பமா? என்பதை அறிந்து கொள்ள ஒரு வருட காலத்தின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

- அமைச்சர்கள் கூட்டத்தில் இந்த யோசனை இந்தியாவினுடையது என்று கூறியே முன் வைக்கப்பட்டது.

இந்த யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டால் இலங்கைக்குள் தீவிரவா

(4 ஆம் பக்கம் பார்க்க)

#### சுபநேரம்

20-07-1987
திங்கட்கிழமை
சுபநேரம்:-
12.01 முதல் 1.31 வரை
ராகுகாலம்:-
7.31 முதல் 9.01வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
கார்த்திகை விரதம்

#### முச்சந்தி முரளி



அவைக்கும் இப்ப நல்லா அரசியல் விளங்குது பின்னை! ஓம், ஓம் மந்திரிமாரும் மற்றவையும் பாதுகாப்பாய் இருக்க அடிபட்டுச் சாகிறவை அவை தானே; தீர்வு எண்டதும் புழுகம் வராதா என்ன...?

### பிரேமாவின் கருத்து பெறப்படும் வரை 'சஸ்பென்ஸ்' நிலை!

கொழும்பு, ஜூலை 20

பிரதமர் பிரேமதாஸாவின் அபிப்பிராயம் பெறப்படும்வரை 'தமிழ்மொழி மாகாணசபை யோசனை' இலங்க அரசின் யோசனையாக முன்வைக்கப்பட மாட்டாது.

புதிய யோசனையின் இறுதி வடிவத்தைப் பார்த்த பின்னரே அங்கீகாரம் வழங்கப்படும் என்று பிரதமர் பிரேமதாச கொழும்பு அரசுத் தலைமைப் பீடத்துக்கு அறிவித்து விட்டார்.

லண்டனிலிருந்து ஜப்பான் புறப்படும் முன்னர் கொழும்பு அரசு தலைமைப் பீடத்தினுல் பிரதமர் தொடர்பு கொள்ளப்பட்டார்.

பிரதமர் பிரேமதாஸா இம்மாதம் 25 ஆம் திகதி நாடு திரும்புகின்றார்.

புதிய யோசனைகள் பற்றி பிரதமருக்கு விளக்

(4ஆம் பக்கம் பார்க்க)

### பிரபாவுடன் ஜே. ஆர் பேசலாம்; ஆனல் இந்தியா வரக்கூடாது

#### பிரேமாவின் நிலை இதுவாம்

கொழும்பு, ஜூலை 20

பிரபாகரனுடன் ஜனதிபதி பேச்சுக்கள் நடத்துவதை நான் ஆட்சேபிக்க மாட்டேன்.

ஆனல் இந்தியாவை இப்பேச்சுக்களில் இருந்து தள்ளி வைக்க வேண்டும்.

—இப்படி பிரதமர் பிரேமதாஸ வெளிநாடு செல்லும் முன்னர் சக அமைச்சரிடம் கூறியிருந்தார்.

இத்தகவலை 'சண்டே டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டிருக்கின்றது.

மாகாண சபைகளிலும் பார்க்க தனது பிரதேச சபைகள் தான் முன்னேற்றகரமானது என்று பிரதமர் நம்பிக் கொண்டிருக்கின்றார்.

இந்த நிலையில் புதிய யோசனைகள் குறித்து பிரதமரின் அபிப்பிராயம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கப் போகிறது.

—இப்படி 'சண்டே டைம்ஸ்' மேலும்தெரிவித்திருக்கின்றது. (உ-எ)

### அடுத்த நடவடிக்கை புதனன்று வெளியாகும்

கொழும்பு, ஜூலை 20

இனப்பிரச்சினையின் அடுத்த நடவடிக்கை பற்றி அரசு நாளை மறுதினம் (புதன்கிழமை) அறிவிக்கும்.

- இப்படி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

புதன்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்படும்.

- இப்படி அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

### தற்போதைய யோசனை; தயாரித்தது யார்?

கொழும்பு,ஜூலை 20

புதிதாக உருவாகியுள்ள யோசனைகள் யாரால் சமர்ப்பிக்கப்பட்டன.?

இது குறித்து அரசு சார்புப் பத்திரிகை ''சண்டே ஒப்சேர்வர்'' வெளியிட்டுள்ள தகவல் வருமாறு:-

வடக்கு, கிழக்கு இணைந்த தமிழ்மொழி மாநில யோசனை முதலில் உத்தியோகப் பற்றற்ற இந்திய நடுநிலையாளர்களால் கொழும்பு அரசுப் பிரமுகர்கள் முன் வைக்கப்பட்டது.

சென்னையில் இருந்து இயங்கும் சில இந்திய நடுநிலையாளர்களே புதிய சிந்தனையை உருவாக்கினர்.

பின்னர் இது இந்தியத் தூதர், அமைச்சர்கள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### பிந்திய யோசனை ஏற்கப்பட்டால்...

கொழும்பு, ஜூலை 20

புதிய யோசனைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டால் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்; அரசுத் துருப்புக்கள் முகாங்களுக்குள் வைக்கப்படுவர்.

அரசமைப்புச் சட்டத்தின் ஆறுவது திருத்தம் ரத்துச் செய்யப்படும்.

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுவிக்கப்படுவர்.

பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய செய்தியில் ஜனதிபதி ஜெயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதர் கடந்த சனிக்கிழமை புதுடில்லி கொண்டு சென்ற செய்தியில் இந்த விவரம் அடங்கி

(4-ஆம் பக்கம் பார்க்கக)

அமைப்பு உருவாகியவுடன்

### இந்தியா, இலங்கை உடன்பாடு ஒன்று கைச்சாத்தாகும்

கொழும்பு, ஜூலை 20

புதிய யோசனைகள் பற்றி சரியான அமைப்பு உருவாகியவுடன் இந்தியாவும் இலங்கையும் ஒரு உடன்பாட்டில் கைச்சாத்திடும்.

உடன்பாடு காணுவதற்கு இலங்கை அரசும் தமிழர் அமைப்புக்களும பேசவேண்டியதில்லை.

(4-ஆம் பக்கம் பார்க்க)

### மாகாண சபை ஒன்று; நிர்வாகம் தனித்தனி

கொழும்பு, ஜூலை 20

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பொதுவான மாகாண சபை இருந்தாலும் நிர்வாகரீதியில் வடக்குதனியாகவும் கிழக்கு தனியாகவும் நிர்வகிக்கப் படும்.

வடக்கு மாகாணசபையில் 36 உறுப்பினர்களும்- கிழக்கு மாகாண சபையில் 35 உறுப்பினர்களும் இருப்பர்.

—இப்படி கொழும்புச் செய்திகள் தெரிவிப்பதாக இந்திய வானெலி அறிவித்தது.

புதிய யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனித்தனியாக சர்வசனவாக்கெடுப்பு நடத்துவதா அல்லது இரண்டுக்கும் பொதுவான வாக்கெடுப்பு நடத்துவதா என்பது பின்னர் தீர்மானிக்கப்படும்.

—இப்படி அச்செய்திகள் தெரிவிப்பதாக இந்திய வானெலி மேலும் அறிவித்தது. (உ-எ)

### முக்கிய நேரத்தில் பூரி இங்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் உயர் அதிகாரியான திரு. எச். எஸ். பூரி மீண்டும் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இந்தியாவின் நிவாரணப் பொருள்களை ஏற்றிக் கொண்டு நான்காவது கப்பலான 'நிக்கோரேட்' காங்கேசன்துறை வந்துள்ளது.

அதிலிருந்து பொருள்களை இறக்குவதனை மேற்பார்வை செய்வதற்காகவே திரு. பூரி இங்கு வந்துள்ளார்.

எனினும் ஸ்ரீ லங்கா அரசாங்கத்தின் புதிய யோசனை சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இவ் வேளையில் திரு. பூரி இங்கு வந்திருப்பது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது எனச் சொல்லப்படுகிறது.

இன்று கொழும்பு திரும்பும் திரு. பூரி, நேற்றிரவு சில முக்கிய சந்திப்புகளை நடத்தினர் என அறிய வந்தது. (அ-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னஞ்சிறு விளம்பரம்**

**புத்தகம்**

'சாத்திருந்தது போதும்' வெளிவந்து விட்டது '' வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமராலஜி '' தனிப்பிரதி 6/50, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். தபாலில் பெறுவதாயின் ஒன்பது ரூபா முத்திரைகள் அனுப்பவும். டேவிட் விகோரி, 38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (1280)

## கொழும்பிலிருந்து பிறஇடங்களுக்கு
# இடம்மாற்றம் கோரும் 50 ஆயிரம் அரச ஊழியர்

கொழும்பு, ஜூலை 20

கொழும்பில் உத்தியோகம் செய்யும் சுமார் 50 ஆயிரம் அரச ஊழியர்கள் வெளியிடங்களுக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்துள்ளார்கள்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வீட்டுப்பிரச்சினை, பிள்ளைகளின் பாடசாலை இடப்பிரச்சினை போன்ற காரணங்களுக்காகவே, இவர்கள் கொழும்பில் இருந்து இடமாற்றம் கோரி பொது நிர்வாக அமைச்சிற்கு விண்ணப்பித்திருக்கின்றார்கள்.

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் கொழும்பில் இருந்து மாற்றலாகிச் செல்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களிலிருந்தே இத்தகவல்கள் கிடைத்துள்ளதாக, பொது நிர்வாக அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் ஜனாப் எம். எம். ஜுனைத் தெரிவித்துள்ளார்.

தொழில் வங்கித் திட்டத்தின் கீழ், புதிதாக புதிய தொழில்களுக்கு அமர்த்தப்படுபவர்கள் கூட கொழும்பை வெறுக்கின்றார்களாம்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் 2 வருடங்கள் ஏனைய இடங்களில் 5வருடங்கள் கடமையாற்றும் ஊழியர்களுக்கே அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இடமாற்றம் வழங்கப்படும் என்று ஜனாப் ஜுனைத் அறிவித்துள்ளார். (உ-164)

## 'ஷப்ரு' ஆதரவு உதைபந்தாட்டம்
# பொற்பதி அணி சாம்பியனானது!

யாழ்ப்பாணம், ஜூலை 20

''ஷப்ரு'' நிதி நிறுவனத்தின் ஆதரவில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய 7 பேர் கொண்ட—அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகம் சாம்பியனானது.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ''சாம்பியன்'' கிண்ணத்திற்கான இந்த மோதல் நடைபெற்றது.

இந்த மோதலில் பொற்பதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்தை 4 இற்கு 0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்து சாம்பியனாகியது.

இந்த சுற்றுப்போட்டியில் 8 விளையாட்டுக் கழக அணிகள் பங்கு கொண்டன. (உ-7)

## நல்லூர் உற்சவம்:
# சட்ட விரோத வியாபார நிலையங்கள் மீது கடும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை20

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தின்போது சட்டவிரோதமாக வியாபார நிலையங்கள் அமைப்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

—இவ்வாறு யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

எதிர்வரும்31ஆம்திகதி ஆரம்பமாகவுள்ள உற்சவம் இம்முறை மிக எளிமையான முறையில் கொண்டாடப்படும்.

உற்சவத்தில் வியாபாரநிலையங்களை அமைப்பதற்கு யாழ்மாநகர சபை இடங்களை ஒதுக்கியுள்ளது.

அதை விடுத்து விட்டு வேலிகளை வெட்டி வியாபாரநிலையங்களை அமைப்பவர்களின் வீட்டு மின்சார இணைப்பு உடனடியாக துண்டிக்கப்படும்.

சாதாரண உற்சவ நாட்களில் இரவு 6.30 மணிக்கும் விசேட உற்சவ நாட்களில் இரவு 7 மணிக்கும் வீதித் தடைகள் அகற்றப்படும்.

ஒழுங்குகளைக் கவனிப்பதற்கு தொண்டர் படைகள், சாரணர்கள், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படை என்பன சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-7)

## சம்பள உயர்வு எப்படிக் கொடுப்பது?

கொழும்பு, ஜூலை 20

ஆண்டு ஒன்றுக்கு பாதுகாப்புச் செலவினத்துக்கு 2,000 கோடி ரூபாவை ஒதுக்குவதால், அரசு ஊழியருக்கு சம்பள உயர்வு அளிக்க முடியாதுள்ளது.

இப்படி நிதி அமைச்சர் ரொனி டி மெல் சொன்னார்.

அரசு ஊழியருக்கு சம்பள உயர்வு கொடுக்கப்பட வேண்டும்; நிச்சயம் கொடுக்கப்பட்டேயாக வேண்டும் என்று அமைச்சர் மேலும் சொன்னார். (இ-எ)

## இந்திய நிவாரணம் கிழக்கிற்கும் வேண்டும்

மட்டக்களப்பு, ஜூலை 20

இந்தியா வழங்கும் நிவாரண உணவு கிழக்கு மாகாண அகதிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என இந்திய அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று ஏறாவூர் பிரசைகள் குழுவினரால் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

குழுவின் கூட்டம் அண்மையில் திரு. எஸ். எம், லீனா தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தில் அமைதியான சூழ்நிலை உருவாகும் வரை எந்த ஒரு தேர்தலும் நடைபெறக் கூடாதென அரசைக் கோருவதெனவும் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. (உ-21)

## இடிக்கப்படும் வீடுகள்

வடமராட்சி, ஜூலை2

இமையாணனில் உள்ள பொதுமக்களின் வீடுகள் இடிக்கப்பட்டும் எரிக்கப் பட்டும்வருகின்றன.

இமையாணனில் உள்ள குஞ்சர்கடையடியில் மினி இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்தே இந்த இடிப்பு, எரிப்பு வேலைகள் இடம்பெறுகின்றனவாம்.

## சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

சங்கானை, ஜூலை 20

சங்கானை சந்தைப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரித்திருக்கிறது.

இந்தத் திருட்டைத் தவிர்ப்பதற்காக சயிக்கிள் பாதுகாப்பு நிலையமொன்று அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது

## பொதுக் கூட்டம்

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் ஜூலை மாதம் 26 ஆம் திகதி(ஞாயிறன்று)மாலை 4.00 மணியளவில் செட்டித் தெருவில் உள்ள 80 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## முல்லைத்தீவு காடுகளில் பதுங்கியிருக்கும் படையினர்

யாழ்ப்பாணம், ஜூலை 20

முல்லைத்தீவுப் பகுதிக் காடுகளுக்குள் அரசுப் படைகள் பதுங்கிஇருந்து போராளிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவதாக அறியவருகின்றது.

நாற்பத்தெட்டு மணிநேர ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்தபோது, சிப்பாய்கள் பெரும் எண்ணிக்கையில்ஹெலிக்கொப்டர்கள் மூலம் முல்லைத்தீவுப் பகுதிக் காடுகளுக்குள் இறக்கப்பட்டனராம்.

இதனிடையில் வடபகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசுப் படைகள் ஈடுபட்டிருப்பதாக அமைச்சர் அத்துலத்முதலி அறிவித்திருக்கின்றார்.

இம் முயற்சியின் ஒரு கட்டமாக சுமார் 200 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ)

## போதைவஸ்து கடத்தல்
# சிங்கள இளைஞனுக்கு மரண தண்டனை

கொழும்பு, ஜூலை 20

போதை வஸ்து கடத்திய உபசேன சந்திரசேன என்ற சிங்கள இளைஞனுக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ரி. சுந்தரலிங்கம் மரண தண்டனை விதித்தார்.

பதினொரு கிலோகிரும் ஹெரோயினை மோட்டார் உதிரிப் பாகங்களுக்குள் வைத்து கட்டுநாயக்கா விமான நிலையத்தில்கடத்தியதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

அதற்கு உதவி புரிந்ததாகக் கூறப்படும் புஞ்சி பண்டா என்ற நபருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (உ-எ)

# வடமராட்சியில் முகாம்களைச் சுற்றி மண் அரண்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 20

வடமராட்சிப்பகுதியில் உள்ள இராணுவ முகாம்களைச் சுற்றி மண் அரண்கள் அமைக்கப்படுகின்றன.

முகாமில் இருந்து ஐநூறு யார் தூரத்துக்கு அப்பால் பத்தடி உயரத்துக்கு மண் குவிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நெல்லியடி இராணுவ முகாம் புலிகளினால் தாக்கப்பட்டதையடுத்து சகல இராணுவ முகாம்களும் தீவிரமாகப்பலப்படுத்தப் படுகின்றன.

புல்டோசர்கள் மூலம் மண் வெட்டப்பட்டு முகாம்களைச் சுற்றி குவிக்கப்படுகிறது.

இத்தகைய முகாமுக்கு செல்வதற்கு ஒரே ஒரு வழி மட்டுமே அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## 20 தொழிற்சங்கங்கள் நடத்தும்:
# வேலைநிறுத்தப்போருக்கு ஈழவர்முன்னணி ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூலை20

சிறிலங்கா அரசுக்கு எதிராக 20 பிரதான தொழிற்சங்கங்கள் நடத்தவிருக்கும் வேலைநிறுத்தப் போராட்ட நடவடிக்கைகளுக்கு ஈழவர் முன்னணி ஆதரவு தெரிவித்திருக்கிறது.

காலம் கடந்துவிட்ட போதிலும் தற்போதாவது இத்தொழிற்சங்கங்கள் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட முன்வந்ததையிட்டு பாராட்டுத் தெரிவிப்பதாக ஈழவர் முன்னணி அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

எதிர்வரும் 30ஆம் திகதி வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள 20 தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றன

இதுதொடர்பாக ஈழவர் முன்னணி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஏகாதிபத்தியத்தின் அடிவருடியாக இயங்கும் சிறிலங்கா முதலாளித்துவ அரசுக்கு எதிராக நடாத்தப்படும் ஆக்கபூர்வமான அனைத்துப் போராட்ட நடவடிக்கைகளுக்கும் ''ஈழவர் முன்னணி'' ஆதரவு வழங்கும்.

உழைக்கும் மக்களின் உன்னதமான எதிர்காலத்தினை மதிக்காத - அடிப்படை மக்களது நலன்பேணும் உணர்வை நடத்தி வரும் சிறிலங்கா அரசு பீடத்திலுள்ளவர்கள் நிலைநாட்டும் கொடுரங்கள்பற்றி உலகம் நன்கு உணரும்.

உறுதியான வெளிநாட்டுக்கொள்கை இல்லாமல், தமிழ் பேசும் மக்களுக்குரிய நிரந்தர அரசியல் தீர்வை முன்வைக்காது, இன அழிப்பில் குறியாக, இராணுவ நடவடிக்கைகளை பல்தரப்பட்டவாறு பெருக்கியும் உலகப்பிற்போக்கு சக்திகளுக்கு அனுசரணையாக எடுபட்டும், இன்று இந்துசமுத்திர பிராந்திய ஒற்றுமைக்கு சிறிலங்கா பெரும் கேடு விளைவித்துள்ளது.

'இலங்கையைபௌத்த சிங்கள சிறிலங்கா'வாக உருவாக்க முதலாளித்துவ அரசு போட்டி போட்டு எடுத்துவந்த நடவடிக்கைகள் அரசின் இராணுவ செலவினங்களை பன்மடங்காகப் பெருக்கி உள்ளது. உள்ளூர் உற்பத்தி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இளைஞர்களின் கல்வி மோசமடைந்துள்ளதுடன் கைதிகளின் எண்ணிக்கை பெருகிய வண்ணம் உள்ளது: இதனால் மக்களது வாழ்க்கை தரம் பின்தள்ளப்பட்டுள்ளது. நாட்டின் முதுகெலும்பாக அமையும் மலையக பாட்டாளிகளின் உரிமைகளும், உடைமைகளும் கண்மூடித்தனமாகப் பறிக்கப்படுகிறது. அனைத்து தொழிலாளர்களும் நசுக்கப்படுகின்றனர். இந்த நிலையில் தென்னிலங்கை மக்களிடையே இனவாத போக்கைக் கிழித்தெறிந்து முதலாளித்துவ அரசுக்கு எதிராக தொழிற்சங்கங்கள் ஒன்றுபட்டு கிளர்ந்தெழவேண்டும் என ஈழவர் முன்னணி எதிர்பார்க்கிறது. (உ)

## வடமராட்சி 2 ஆம் கட்டக் கொடூரம்
# இராணுவத்திடம் அகப்பட்டவர் தனது இரத்தத்தை தானே குடித்த கதை!
## மிருகத்தனமான சித்திரவதைகள்

வடமாரட்சிச் செய்தியாளர்

வடமராட்சி, ஜூலை 20

இருவாரங்களுக்கு முன்னர் வடமராட்சியில் இடம்பெற்ற இராணுவத்தாக்குதலில் சிக்கி சித்திரவதைக்குள்ளான இமையாணனைச் சேர்ந்த நடுத்தரவயதுக்காரர் ஒருவர் தமக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவத்தைப் பின்வருமாறு உதயன் செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

வடமராட்சியில் இடம்பெற்ற முதலாவது தாக்குதலைத் தொடர்ந்து இடம்பெயர்ந்தேன்.

நிலைமை சீரடைந்து விட்டது. திரும்பிவந்து குடியிருங்கள், இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படும் — இப்படி யாழ்ப்பாண வானொலியில் விடுக்கப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து நான் வடமராட்சிக்குத் திரும்பினேன். திடீரென்று வந்து வீட்டில் வைத்து என்னை இராணுவத்தினர் கைது செய்தனர்.

'எங்கே கொட்டியா' இருக்கின்றது என்று கேட்டார்கள். எனக்குத் தெரியாது என்று சொன்னேன். பொய் சொல்கிறாய் என்று கூறி என்னைத் தாக்கினார்கள்.

பின்னர் புருப்பொறுக்கி ஊடாக மண்டான் முகாமுக்கு அழைத்துச் சென்றனர். வழியிலும் எனக்கு அடியும் உதையும் கிடைத்தன. பங்கர் ஒன்றைக் கண்டதும் கொட்டியா இங்கே இருந்ததா? என்று கூறி துப்பாக்கியால் என்தலையில் அடித்தனர். தலையில் இருந்து இரத்தம் ஓடியது. அதைக் குடிக்கும்படி அடித்தார்கள். என் இரத்தத்தை நானே குடித்தேன். பின்னர் என்னைச் சித்திரவதை செய்தனர்.

செல்லும்வழியில் இவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டே வந்தனர். இதனால் வீடுகளில் இருந்த சிலர் உயிரிழந்திருக்கலாம்.

மூன்று இளைஞர்களைக் கைதுசெய்து என்னுடன் நெல்லியடி முகாமுக்குக் கொண்டுசென்றனர்.

அப்போது சிங்களத்தில் 'கொட்டியா'என்று எழுதப்பட்ட அட்டையை எனது கழுத்தில் தொங்கவிட்டனர்.

தங்களின் தோளில் போடப்பட்டிருந்த கிறனேற் கவசத்தைக் கழற்றி எனது தோளில் போட்டனர். பின்னர் 'கொட்டியா, கொட்டியா' என்று கைதட்டிச் சிரித்தபடி எம்மை உதைத்தனர்.

இப்படியாக நெல்லியடி முகாம் கொண்டு செல்லப்பட்டோம். நெல்லியடி முகாமில் [illegible] வீசியது. முகாமில் பல கட்டங்கள் இடிந்து தரை மட்டமாகிக் காணப்பட்டன.

பின்னர் நாம் மந்திகை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டோம். கிறனேற்றுடன் எம்மைப் பிடித்ததாகக் கூறி எம்மைப் பொலீஸில் ஒப்படைத்தனர்.

பின்னர் தமிழ்தெரிந்த பொலீஸ்காரர் ஒருவரும் எம்மைத் தாக்கினார். என்னை நிர்வாணமாக்கிக் குப்புறப் படுக்கச் சொல்லி சப்பாத்துக் காலினால் உதைத்தனர்.

சிப்பாய் ஒருவர் துப்பாக்கி முனையினால் என் மார்பைநோக்கிக் குத்தவந்தார். நான் கையால் தடுத்தேன். துப்பாக்கிமுனை என் கையைக் குத்திக் காயத்தை ஏற்படுத்தியது.

அப்போது அங்கு வந்த கறுப்புச் சட்டைக்காரர் ஒருவர் கையில் இருந்த கத்தியால், கூடநின்ற தமிழ் இளைஞன் ஒருவனின் முகத்தில் கீறிவிட்டுச் சென்றார்.

இரவுமுழுவதும்உணவு தராமல் முகாமில் தங்க வைத்துவிட்டு மறுநாளே வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டேன்—

—இப்படி இமையாணன் வாலிபர் சொன்னார். (உ-எ-160)

# அமைதிதான் தேவை தேர்தல்கள் அல்ல
## வவுனியா முஸ்லிம் பிரமுகர் கூறுகிறார்

வவுனியா, ஜூலை20

யாழ் குடாநாட்டில் போராளிகளும் - இராணுவமும் இடைவிடாமல் மோதிக்கொண்டிருக்கின்றார்கள்: மக்கள் உயிருக்கு அஞ்சி சொத்து சுகங்களை இழந்தும், மறந்தும் பாதுகாப்புத் தேடி ஓடிக்கொண்டிருக்கின்றார்கள்.

திடீர் தேடுதல் வேட்டைகள் இராணுவத்தினரால் நடத்தப்பட்டு, இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றார்கள்.

இந்த நிலையில் எமக்குத் தேவை அமைதியும் உயிருக்கான பாதுகாப்புமே;தேர்தல்கள் அல்ல.

—இவ்வாறு வவுனியா மாவட்ட முஸ்லிம் அபிவிருத்திச் சங்கத் தலைவரும், நகர பள்ளிவாசல் பரிபாலன சபைத் தலைவருமான ஜனாப். பி. எஸ். அப்துல்லா தெரிவித்தார்.

இனப்பிரச்சினை தீர்ந்த பின்னரே பிரதேச சபைத் தேர்தலையோ அல்லது வேறு எந்த அரசியல் தேர்தலையோ பற்றிச் சிந்திக்க முடியும். இதுவே இம்மாவட்டத்தின் முஸ்லிம் மக்களின் இன்றைய நிலைப்பாடு எனத் தெரிவித்தார். (உ-164)

## கனடா பயணம்

யாழ்ப்பாணம், ஜூலை20

வருடாந்தம் நடைபெறும் இலங்கை — கனடா இளைஞர் பரிமாற்று திட்டத்தின்கீழ் இம் முறையும் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் கழகங்கள், நிஸ்கோ கூட்டுறவு உறுப்பினர்கள் ஆகியோரிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 42 இளைஞர், யுவதிகளும் 8 இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் சேவை உத்தியோகத்தர்களும் கடந்த 11 ஆம்திகதி கனடா பயணமாகினர். (உ)

ஓர் அரிய பெரிய சந்தர்ப்பம்

மீண்டும் வழமைபோல்

வெளிநாடு செல்ல முடியும்

- ஜேர்மனி
- பிரான்ஸ்
- பெல்ஜியம்
- நோர்வே
- கனடா

AUCTIONERS & BROKERS

உடனடியாக தாமதமின்றித் தொடர்பு கொள்க

ஏனைய வசதிகளும், ஒழுங்குகளும் செய்யப்படும்

எங்கள் ஏனைய சேவைகள்:-

- எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்
- துரிதமான பாஸ்போட், விசா, பொண்ட் ஒழுங்குகள்
- Confirmation, Re-confirmation & Cancellations
- இந்தியப் பயணத்தில் விசேடவசதிகள்

Mack Communications & Travels

இல. 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Telephone 24791; 24836

(1279)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

பிறவிப் பயன் தெய்வ தரிசனமாகும். இதை ஒருபொழுதும் மறவாதே. இடையறாது அவருடைய அருளுக்காக முயற்சி செய்.

— சுவாமி சிவானந்தர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
20.07.1987 க.பெ.இல: - 23

# இம்முறையாவது நம்பலாமா...!

இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்திக்கு ஸ்ரீலங்கா ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன எழுதிய கடிதம் ஒன்றை எடுத்துக் கொண்டு, கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஷிற் சனிக்கிழமை மாலை புதுடில்லி விரைந்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான, ஸ்ரீலங்கா அரசின் புதிய யோசனை ஒன்றையும் அவர் எடுத்துச் செல்வதாகக் கூறப்பட்டது. ஆனால் அது குறித்து ஊர்ஜிதமான தகவல் எதுவும் இல்லை.

கொழும்புக்குப் பதவியேற்று வந்த காலத்திலிருந்து, திரு. டிக்ஷிற் இதுபோன்ற அவசரப் பயணங்களை நூற்றுக்கும் மேற்பட்ட தடவைகள் மேற்கொண்டிருப்பார்! ஸ்ரீலங்கா அரசின் செய்திகளையும், யோசனைகளையும், கடிதங்களையும், பலதடவைகள் கொழும்பிலிருந்து டில்லிக்குச் சுமந்து சென்றிருப்பார்!! அதே போல அங்கிருந்தும் பல கடிதங்களையும், செய்திகளையும் இங்கு கொண்டு வந்திருப்பார்!!!

அவர் இங்கிருந்து அவசரப் பயணம் மேற்கொள்ளும் போதும், அங்கிருந்து அவசரமாக கொழும்பு விரையும் போதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று கிடைத்து விட்டதாகப் பலதடவைகள் நம்பப்பட்டது உண்டு. கடைசியில் கணக்குப் பார்த்துக் கிடைத்தது வெறும் பூச்சியமே!

வார இறுதியில் அவர் மேற்கொண்ட பயணமும் பிரசினைக்குரிய தீர்வுக்கு வழி செய்யக்கூடும், வழி செய்ய வேண்டும் என்றே பலரும் எதிர்பார்க்கிறார்கள்.

ஆகக் கடைசியாக, டிசம்பர் 19 யோசனைக்குக் கூடுதலான புதிய திட்டம் ஒன்றை இந்தியா கொழும்பிடம் இருந்து எதிர்பார்த்தது. ஆனால் டிசம்பர் 19 யோசனைக்கு மேலாக ஓர் அங்குலம் தானும் அசைய முடியாது என்று ஸ்ரீலங்காவின் முக்கிய அமைச்சர் லலித், ஒரு வாரத்துக்கு முன்னர் கூறியிருந்தார்.

ஆனால் அதன் பின்னர் திடீர் திடீரென அமைச்சரவைக் கூட்டங்கள் என்றும் 'மினி' அமைச்சரவைக் கூட்டங்கள் என்றும் நடந்திருக்கின்றன. திரு. டிக்ஷிற்றை ஜனாதிபதி ஜே. ஆர். பல தடவைகள் அழைத்துப் பேசியிருக்கிறார். அமைச்சர்களையும் வைத்துக் கொண்டு இந்தியாவின் நிலைப்பாடு, தமிழ்ப் போராளிகளின் நிலைப்பாடு என்பனவற்றைக் கேட்டறிந்து உள்ளார்.

மொத்தத்தில் இந்திய அணுகுமுறைக்கு ஏற்ற விதத்தில் டிச. 19 யோசனைகளில் சில திருத்தங்களைச் செய்திருப்பதாக அறியப்படுகிறது.

எனினும் ஸ்ரீலங்காவின் ஆகப் பிந்திய சரியான நிலைப்பாடு என்ன என்பது இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

அதனால் புதிய நிலைப்பாடும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கதைதானா, அல்லது நம்பிக்கை தரக்கூடிய ஆக்கபூர்வமான அம்சம் இரண்டொன்றுவது அடங்கியுள்ளதா என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை.

எனினும் இம்முறை வேறுபட்ட அணுகுமுறையும், சூழலும் நிலவுவதை அவதானிக்க முடிகிறது.

வெளிநாடுகளிடம் இருந்து உதவி பெற வேண்டுமானால் இங்கு விரைவில் அமைதியும் சமாதானமும் நிலவ வேண்டும். பெரிய நாடான இந்தியாவுடன் நாம் சேர்ந்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும் — என்று நிதி மந்திரி கூறி இருக்கிறார்.

இன்னும் சில தினங்களில் நல்லவை நடைபெறும் என்று அமைச்சர் காமினி நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

மொத்தத்தில் இந்தியாவைப் பகைத்துக் கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை அரசாங்க உயர்மட்டம் ஓரளவாவது உணர்ந்துள்ளது தெரிகிறது.

அர்த்தமற்ற விதத்தில் இந்திய எதிர்ப்பு ராகம் பாடும் பிரதமர் பிரேமதாசவும் விரைவில் உணருவார் என எதிர்பார்ப்போம்.

அணு ஆயுத உற்பத்தி விடயத்தில் பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் தகராறு மூளும் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ள சூழ்நிலையிலும்—

இந்தியாவின் ஜனாதிபதியாக தமிழர் ஒருவர் பதவி ஏற்க இருக்கும் சூழ்நிலையிலும்—

இராணுவ நடவடிக்கையினால் தமிழர்களை அடிபணிய வைக்க முடியாது என்பதை வடமராட்சி பாடம் புகட்டி உள்ளதாலும்—

ஸ்ரீலங்கா புதிய அணுகுமுறை ஒன்றை நாடுவதாகத் தோன்றுகிறது.

புதிய நாட்டத்தை இனப்பிரச்சினைக்கான நம்பிக்கை ஒளிக்கீற்றாகக் கொள்ளலாமா? அந்த ஒளிக்கீற்றைப் பெரிதாகி விடிந்து, வெளிச்சம் தருவதற்கு நீண்ட காலம் செல்லாமல் இருக்கவேண்டும் என்பது பிரதானம்.

---

வளைகுடாப் போரை நிறுத்தக் கோரும்

# ஐ. நா. தீர்மானத்துக்கு கட்டுப்பட ஈரான் மறுப்பு

தெஹ்ரான், ஜூலை 19

ஆக்கிரமிப்பு நாடு என்று ஈராக்கை ஐ. நா. கண்டனம் செய்ய வேண்டும்.

அப்படிச் செய்யாதவரை ஐ. நா. கொண்டு வரும் யுத்த நிறுத்த யோசனையை ஈரான் ஏற்காது.

—இப்படி ஈரானிய வெளிநாட்டமைச்சர் வெலாயடி தெரிவித்திருக்கின்றார்.

வளைகுடா யுத்தத்துக்கு முடிவு கட்டுமுகமாக யுத்த நிறுத்த தீர்மானம் ஒன்றை எடுப்பது பற்றி ஆராய ஐ. நா. பாதுகாப்புச்சபை இன்று (திங்கள்) கூடுகின்றது.

யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் சர்வதேச எல்லைகளுக்கு படைகளை இருதரப்பினரும் விலக்கிக் கொள்ள வேண்டும். தவறினால் இரண்டு நாடுகள் மீதும் ஆயுதத்தடை விதிக்கப்படும்.

இப்படி ஐ. நா. நகல் தீர்மானம் கூறுகின்றது. (உ-எ)

## வல்லரசுகள் விலகவேண்டும்

போர்லூயி, ஜூலை 19

இந்து மகாசமுத்திரத்தில் வல்லரசுகள் படைகளை விலக்கிக் கொண்டால் மட்டுமே உலக சமாதானம் நிலைக்கும்.

—இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் நாராயண் தத் திவாரி மொரிஷியஸில் தெரிவித்தார்.

மொரிஷியஸ் நாட்டுக்கு விஜயம் செய்த இந்திய அமைச்சருக்கு அங்கு குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டது. (உ-எ)

## அமிதாப் பச்சனின் சகோதரர்மீதுவிசாரணை

புதுடில்லி, ஜூலை 19

எம் பி பதவியை இராஜினாமாச் செய்துள்ள பிரபல நடிகர் அமிதாப் பச்சனின் சகோதரரான அஜிதாப் பச்சனின் வெளிநாட்டுத் தொடர்புகள் குறித்து விசாரணை நடத்தப்படும்.

இதற்கான உத்தரவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் நிதி அமைச்சர் வி. பி. சிங்கிற்கு இது சம்பந்தமாக பிரதமர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

கடந்த வெள்ளிக்கிழமையே இந்த விசாரணைக்குத்தான் உத்தரவிட்டதாக பிரதமர் அக் கடிதத்தில் தெரித்திருந்தார். (உ-எ)

## பிரான்ஸ் பிரமுகர்கள் ஈரான் விசாரணையில்

தெஹ்ரான், ஜூலை 19

ஈரானில் உள்ள பிரான்ஸின் ராஜதந்திரிகள் உளவுக் குற்றச்சாட்டுக்களாக இஸ்லாமிய நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவர்.

—இப்படி ஈரான் அறிவித்துள்ளது.

பிரான்ஸ் - ஈரான் இராஜதந்திர உறவுகள் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஈரான் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (உ-எ)

## இந்திய - பாக் நேரடித் தொலைபேசி

புதுடில்லி, ஜூலை 19

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நேரடித் தொலைபேசித் தொடர்பு செப்டம்பர் முதலாம் திகதி தொடக்கம் ஏற்படுத்தப்படவிருக்கின்றது. (இ-எ)

## பத்திரிகை மீது வழக்கு

சென்னை, ஜூலை 19

முதலமைச்சர் இராமச்சந்திரனின் உடல்நிலை பற்றிப் பொய்யானது எனச் சொல்லப்படும் தகவலைப்பிரசுரித்த பம்பாய் வாரசஞ்சிகை மீது கிரிமினல் வழக்குத் தொடர தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இத் தகவலை அரசுப் பேச்சாளர் ஒருவர் வெளியிட்டார். (உ-எ)

## சூறாவளிக்குப் பலியானோர் 240 பேர்

சோல், ஜூலை 19

தென்கொரியாவில் கடந்தவாரம் வீசிய சூறாவளியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 240 ஆக அதிகரித்துள்ளது.

நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

இச் சூறாவளி பல கிராமங்கள், நகரங்களை நாசப்படுத்தியது. (இ-எ)

## ஈரான் உறவை பிரான்ஸ்முறித்தது

பாரீஸ், ஜூலை 19

ஈரானுடனான ராஜதந்திர உறவை பிரான்ஸ் துண்டித்துக் கொண்டது.

ராஜதந்திர நெருக்கடி உச்சமடைந்ததைத் தொடர்ந்து, ராஜதந்திர உறவை முறித்துக் கொள்வதாக பிரெஞ்சு அரசு வெள்ளியன்று தீர்மானித்தது. (உ-எ)

## மன்னிப்பு வழங்கத்தயார்!

பனமா, ஜூலை 19

அண்மையில் அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டதற்காகக் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கானோருக்கு பொதுமன்னிப்பு வழங்க பனமா ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

பனமா இராணுவத் தளபதியை பதவி நீக்கம் செய்யக்கோரி இக் கிளர்ச்சி நடத்தப்பட்டது. (உ-எ)

**வெளி உலகில்**

நீதிமன்றம் தீர்ப்பு:

## வத்திக்கான் தனிநாடு; இத்தாலியின்கீழ் இல்லை

ரோம், ஜூலை 19

வத்திக்கான் தனிநாடு. இத்தாலி நாட்டின் நியாயாதிக்கத்தினுள் வத்திக்கான் வரவில்லை.

இத்தாலி உயர்நீதிமன்றம் வழக்கு ஒன்றில் முன்கண்டவாறு தீர்ப்பளித்தது.

இத்தாலி நாட்டின் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஒன்று வத்திக்கானில் உள்ள வங்கி ஒன்றின் மூன்று இயக்குனர்களைக் கைதுசெய்யும் வாரண்டுகளைப் பிறப்பித்திருந்தது.

வங்கி மோசடி வழக்கு ஒன்று தொடர்பாகவே மாஜிஸ்திரேட் நீதிமன்றம் இந்த நடவடிக்கையை எடுத்தது.

மூன்று இயக்குநர்களில் ஒருவர் ஆர்ச் பிஷப் ஆவர்.

நீதிமன்றத்தின் கட்டளையை எதிர்த்து இத்தாலி உயர்நீதிமன்றத்துக்கு முறையிடப்பட்டது.

வத்திக்கான் தனிநாடு. இத்தாலி நாட்டின் சட்ட நியாயாதிக்க வரம்புக்குள் வத்திக்கான் வரவில்லை — இப்படி வங்கி இயக்குநர்கள் சார்பில் வாதாடப்பட்டது.

இதனை உயர்நீதிமன்றம் ஏற்று, மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தின் கட்டளையை ரத்துச் செய்தது. (இ-எ)

## கென்ஸ்டன் மாளிகை அருகேகுண்டுவெடிப்பு

லண்டன், ஜூலை 19

சார்ள்ஸ் இளவரசர் குடும்பம்வசிக்கும்கென்ஸ்டன் மாளிகை அருகில் கார்க்குண்டு ஒன்று வெடித்தது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

ஈரானியப் பிரசை ஒருவர்ஓட்டிச்சென்ற காரிலிருந்தகுண்டேதிடீரென்று வெடித்தது.

ஈரானியப் பிரசை படுகாயமடைந்தார்.

இச்சம்பவத்திற்கு ஈரானிய தீவிரமத அமைப்பு ஒன்று உரிமை கோரியுள்ளது.

படுகாயமடைந்த ஈரானியர் 1979இல் ஷாமன்னர் பதவி துறந்து நாட்டை விட்டு வெளியேறிய போது, கூட வெளியேறியவர் என்று கூறப்படுகின்றது.

## பொற்கோயிலில் 25 பேர் கைது

சண்டிகார், ஜூலை 19

பஞ்சாப்பில் மீண்டும் பொற் கோயிலுக்குள் நுழைந்த பொலீஸார் 25 சீக்கியத் தீவிரவாதிகளைக் கைது செய்தனர். (உ-எ)

## லண்டனில் பேரணி

லண்டன், ஜூலை 17

இலங்கையில் இடம் பெற்ற 1983 ஜூலைக் கலவரத்தை நினைவுகூர்வு முகமாக இம்மாதம் 25 ஆம் திகதி லண்டனில் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் உள்ள ஈழ பிரசார இயக்கம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

இத்தினம் கரிநாளாக அனுஷ்டிக்கப்படும் என்றும்—

அன்றைய தினம் ஹைட்பார்க்கில் பொது கூட்டம் நடத்தப்படும் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

---

யாழ். ஆயர்மாவட்ட பொதுமக்கள் குழுவினால்

# கத்தோலிக்க ஆயர் சபைக்கு அனுப்பப்பட்ட துயரக்கடிதம்!

மேன்மை தங்கிய ஆயர்களே!

எமது போதகர்களும் வழிகாட்டிகளும் நீங்களே.

உங்களை விசுவாசிப்பவர்களின் சுக, துக்கங்களில் பங்கு கொள்வதே உங்கள் பணி.

உங்களை விசுவாசிப்பவர்கள் உங்களின் பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். வேத வசனத்தின்படி அவர்களை வழிநடத்த வேண்டியதும் உங்கள் பணியாகும்.

அண்மைக்கால சம்பவங்கள் அப்பணி மறக்கப்பட்டு விட்டதோ என்ற எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளன. இது வருத்தத்திற்குரியது.

மனிதாபிமான அடிப்படையில் துன்பப்படும் யாழ்குடா நாட்டு மக்களுக்கு இந்தியா வழங்கிய நிவாரண உதவிகளை எதிர்த்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் வகுப்புவாதமானது என்று அர்த்தம் கற்பிக்கப் படலாம்.

அந்த மனிதநேய நடவடிக்கை இலங்கையின் இறைமையை மீறிய செயலாக தவறுகப் புரிந்துகொள்ளப்பட்டு விட்டது.

"எனக்குத் தாகமாக இருந்தது: நீர் எனக்கு தண்ணீர் தரவில்லை, உணவு தரவில்லை"—

இந்திய மனிதநேய நடவடிக்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் பங்கு பற்றியவர்களுக்கு கூறப்பட்டதாக இது அமையாமல் இருக்கட்டும்.

**குரூரமான துன்பங்கள்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்கள் பாதுகாப்புப் படையினரிடம் படும் குரூரமான துன்பங்கள் ஒரு வேளை உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்.

அத் துன்பங்கள் வருமாறு;

கோர மரணங்கள், விமானத்தில் இருந்து குண்டு போடுதல், ஷெல் தாக்குதல்கள்.

> இலங்கைக் கத்தோலிக்க ஆயர் சபைக்கு யாழ்ப்பாணம் ஆயர் மாவட்ட பொதுமக்கள் கவுன்ஸில் அனுப்பிய கடிதம் இங்கு பிரசுரமாகின்றது.

வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள், தேவாலயங்கள், கடைகள், கட்டடங்கள் எரிக்கப்படுதல்—

கிராமங்கள்மீது கடல், தரை, ஆகாயம் மூலம் நடத்தப்படும் தாக்குதல்கள்—

உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்திய பொருளாதார முற்றுகை, மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை, வயல்கள் அழிந்ததினால் ஏற்பட்ட உணவு உற்பத்தி வீழ்ச்சி—

மக்களை ஏற்றிச் செல்[illegible] உணவுப் பொருள்களைக் [illegible] யவற்றுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள்—

வைத்தியசாலைகள் மீது நடத்தப்படும் ஷெல் தாக்குதல்கள் (விசேடமாக யாழ் போதனா ஆஸ்பத்திரி, தெல்லிப்பளை ஆஸ்பத்திரி) யாழ், ஆஸ்பத்திரியை மூட உத்தரவிடப்பட்டது—

ஹெலிக்கொப்டர் மற்றும் விமானத் தாக்குதல்கள், இராணுவ முகாம்களில் இருந்து நடத்தப்படும் ஆட்லறி தாக்குதல்கள்—

இவற்றால் அன்றாட வாழ்க்கை தடைப்படல், மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலை.

—முன்கூறப்பட்ட அக்கிரமச் செயல்கள் காரணமாக பல பொதுமக்கள் உயிரிழந்தனர். பலர் அங்கவீனராகினர்.

—பலர் சித்த சுவாதீனமிழந்தனர். பெண்கள் மானபங்கப்படுத்தப் பட்டனர். விதவைகளாக்கப் பட்டனர். குழந்தைகள் அனாதைகளாக்கப்பட்டனர்.

—குடிமக்கள் குடிபெயர்ந்து ஆலயங்கள், பாடசாலைகளில் தஞ்சமடைந்தனர்.

**வகுப்புவாத உணர்வுகள்**

இத்துன்பங்கள் கூட உங்கள் உள்ளத்தை நெகிழச் செய்யவில்லை என்பது குறித்து நாம் வேதனை அடைகின்றோம்.

அதே கிறிஸ்தவ விசு[illegible] திருக்கவில்லையா? [illegible] வாத ரீதியில் மாறி, எம் சகோ[illegible]

குறித்து நெகிழ்ச்சியடையாமல் இருக்க வேண்டுமா?

இந்திய நிவாரண உணவுப் பொதிகள் விமானமூலம் போடப்பட்ட சம்பவத்தை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி தேசப்பற்று என்ற போர்வையில் ஏன் வகுப்புவாத உணர்வுகள் எழுப்பப்பட்டன?

உங்களுடைய நோக்கம் வகுப்புவாத ரீதியில் அல்ல என்பது உண்மை என்றால் பத்திரிகைகள் மூலம் அதை வெளிப்படுத்த போதுமான சந்தர்ப்பங்கள் இருந்தனவே!

பல பிரிவு மக்கள் மத்தியில் வகுப்புவாதம், குரோதம் ஆகியவற்றை தூண்டுவதன் மூலம் அரசியல் நடத்தும் தலைவர்களின் செல்வாக்குக்கு கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவர்கள் எடுபட வேண்டுமா?

**ஏமாற்றம்**

கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவர்கள் என்ற முறையில் பாதுகாப்புப் படையினரால் மக்கள் அடையும் துன்பங்களை நீங்கள் முன்னர் இங்கு வந்து பார்த்துச் சென்றீர்கள்.

அத்துன்பங்களை நீங்கள் அரசுக்கும் அரசுத் தலைவர்களுக்கும் எடுத்துச் சொல்வீர்கள் என்று எதிர்பார்த்தோம்.

ஆனால் நாம் ஏமாற்றமே அடைந்தோம்.

எங்கள் திருச்சபைத் தலைவர்களான உங்களின் நடத்தை குறித்து உங்கள் மீதும் கிறிஸ்தவரல்லாதவர்கள் குற்றஞ் சுமத்துகின்றார்கள்.

நீங்கள் ஏன் இப்படி நடந்து கொள்கின்றீர்கள் என்பது எம்மால் விளங்கிக் கொள்ள முடியாமல் உள்ளது.

கிறிஸ்தவர்களல்லாதோருக்கு உங்கள் நடத்தை பற்றி விளக்கம் சொல்ல முடியாதிருக்கின்றது.

ஆகவே நேரில் வந்து துன்பங்களைப் பாருங்கள் என்று உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பாதுகாப்புப்படையினரின் அக்கிரமங்களுக்கு ஆளாகியுள்ள ஆண், பெண், குழந்தைகளை வந்து பாருங்கள்.

வீடுகளில் இருந்து வெளியேறி தஞ்சமடைந்த அகதிகளை வந்து பாருங்கள்.

செயலிழந்து 'செத்து'ப் போயுள்ள பட்டினங்கள், கிராமங்களை வந்து பாருங்கள்.

இந்த இன்னல்களுக்கு எல்லாம் அடிப்படைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நிவாரணம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வலிவடக்கு- தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள வடமராட்சி மக்களுக்கு இன்று (திங்கள்) இந்திய நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும்.

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இந்த உணவு விநியோகம் நடைபெறவுள்ளது. (உ 10)

## வரணி வரை வந்த ஷெல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20

குடத்தனைப் பகுதியில் இருந்து அண்மையில் இராணுவத்தினர் ஏவிய ஷெல்கள் வரணிப் பகுதியில் வந்து விழுந்தன. (உ-01)

## ரோட்டறி உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 20

அகதி முகாம்களில் மாற்றுடையின்றி அல்லலுறும் மக்களுக்கு உடுபுடவைகளைச் சேகரித்து வழங்க யாழ் 'ரோட்டறி' கழகம் முன்வந்துள்ளது.

உடுபுடவைகளை வழங்க விரும்புவோர் யாழ் ரோட்டறி கழக செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. (உ-7)



**பொய்யாமொழி**

**குறள்:**

காதன்மை கந்தா அறிவறியாத் தேறுதல்
பேதைமை யெல்லாம் தரும்.

**பொருள் :**

அறியவேண்டியவற்றை அறியாதிருப்பவரை அன்புடைமை காரணமாக நம்பித் தெளிதல், (தெரிந்தவர்க்கு) எல்லா அறியா[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்களின் பாதுகாப்புக்கருதி
எமது ஸ்தாபனம்
புதிய விலாசத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.
க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
இல. 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

# உதயன்

20 07-1987 திங்கட்கிழமை

எங்களிடம்:- அபிஷேகச் சாமான்கள், கோவில் சங்காபிஷேகச் சாமான்கள், ஆயுள்வேத மருந்துக்கள், மருந்துச் சரக்குகள், வாசனைத்திரவியங்கள், சகல சாமான்களையும் உங்கள் திருப்திக்கேற்ற வகையில் பெற்றுக்கொள்ளலாம்.
க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
இல. 4, பலாலி வீதி, 2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

## சிங்களவரிடம் நாம் கேட்பதை முஸ்லிம்களுக்குகொடுக்கவேண்டும்

### கருத்தரங்கில் சிவத்தம்பி உரை

பலாலி, ஜூலை 20

சிங்கள மக்கள் எமக்கு எதைத்தர வேண்டுமென்று நாம் கேட்கின்றோமோ அதை நாம் எமது பிரதேசத்தில் முஸ்லீம்களுக்கு ஏற்படுத்தித்தர வேண்டும் - இது மட்டக்களப்பு உட்பட்ட கிழக்கு மாகாணத்துக்கு மட்டுமன்றி வடக்கிலும் மன்னாரிலும் ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

- இவ்வாறு நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற டிசம்பர் 19 ஆம் திகதிய யோசனைகள் சம்பந்தமான கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கி தொகுப்புரை நிகழ்த்திய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தெரிவித்தார்.

உயிர்களை, சொத்துக்களையெல்லாம் பெருமளகவில் இழந்துவிட்ட நிலையின் பின்பும் வருகின்ற தீர்வு அரைகுறையாக - நிச்சயமற்றதாக இருக்குமானால் அத்தீர்வு எமக்குத் தேவையானதல்ல. அப்படியான இடைக்காலத்தீர்வு ஆபத்தானது மட்டுமன்றி சூழ்ச்சிமிக்கதுமாகும் என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்-இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் 'டிசம்பர் 19 யோசனையும் நிலமும் மக்களும்' என்ற தலைப்பில் பேராசிரியர். பொ. பாலசுந்தரமும் -

'டிசம்பர் 19 யோசனையும் பிரதேச அபிருத்திக்கான சாத்தியக் கூறுகளும்' என்ற தலைப்பில் கலாநிதி வே. நித்தியானந்தனும் -

'டிசம்பர் 19 யோசனை வரை ஏற்பட்ட உடன்பாடுகளும், ஒப்பந்தங்களும் ஒரு நோக்கு' என்ற தலைப்பில் கலாநிதி சி க. சிற்றம்பலமும் -

'டிசம்பர் யோசனையும் நிறுவன ரீதியான ஒழுங்குகளும்' என்ற தலைப்பில் பேராசிரியர் ந. பாலகிருஷ்ணனும் -

டிசம்பர் 19 யோசனையும் இதில் சம்பந்தப்படும் பல்வேறு தரப்பினரது நோக்கும் நிலையும்' என்ற தலைப்பில் கலாநிதி கிருஷ்ணராசாவும் -

இலங்கையின் இன்றைய அரசியல் சூழலும், தமிழ் பேசும் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையும் என்ற தலைப்பில் திரு. ச. சத்தியசீலனும் உரையாற்றினர்.

(உ-119)

பிரயாண ஒழுங்குகள்

★ குவைத் ★
KUWAIT

● பின்வரும் வெற்றிடங்கள் எம்மிடம் உடனடியாக நிரப்ப இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்.

✯ ஆண் ✯ பெண்
இரு பாலாருக்கும்
ஓர் அரியசந்தர்ப்பம்

✶ ஆஸ்பத்திரி வேலையாட்கள்
HOSPITAL CLEANERS

1. Male Cleaners ஆண் வேலையாட்கள்
2. Male Supervisors ஆண் மேற்பார்வையாளர்
3. Female Cleaners பெண் வேலையாட்கள்
4. Female Supervisors பெண் மேற்பார்வையாளர்

✯ 3 வருட ஒப்பந்தம்
✯ இலவச தங்குமிடவசதி
✯ ஒருவருட முதிர்வின் பின் வீடுவந்து செல்ல பிரயாணச்சீட்டு வசதி
Return Ticket (First Class)

● பின்வரும் ஆவணங்களுடன் உடனே வரவும்

I. பாஸ்போட் Pass Port
II. பாஸ்போட் போட்டோ பிரதி PassPort Photo Start
III. கிராமசேவையாளரின் நற்சான்றுப் பத்திரம் Grama Sevaga Certificate
IV. பாஸ்போட் சைஸ்-புகைப்படம் 07ஏழு Pass Port Size Photo 07

● இம்மாத இறுதியில் பிரயாணம்

முக்கிய குறிப்பு:-
★ எக்காரணம் கொண்டும் வேறு முகவரூடாக வரும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

தலைமை அலுவலகம்:
Construction & Development Company Ltd.
37, S. DE.S. JEYASINGHE MAWATHA
NUGEGODA.

Labour Licence No. 96

★ BES ENGINEERING CORPORATION - KUWAIT
இதற்கு வேலையாட்கள் Labourers இன்னமும் தேவையாக இருக்கின்றபடியால் விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்

LABOURERS 40 K. D.
★ இலவச தங்குமிடவசதி
★ இலவச உணவு வசதி
★ நாலு வருட ஒப்பந்தம்
★ இரண்டு வருட முதிர்வின் பின் வீடு வந்து செல்ல பிரயாண சீட்டு வசதி

தொடர்பு:
V. P Balasubramaniam
(V. P. BALA)
C/o N. V. PONNUTHURAI
School Lane,
KONDAVIL.

எந்தத் தீர்வுக்கும் முதலில்

# மக்கள் அனுமதி பெற சர்வசன வாக்கெடுப்பு

## மீண்டும் புறணி பாடுகிறார் ஜே. ஆர்.

கொழும்பு, ஜூலை 20

வடக்கு-கிழக்கு இணைப்பு, தனிநாட்டுக் கோரிக்கை- இவை எல்லாம் புதிய சிந்தனைகள் அல்ல. எல்லாம் பழையவை.

இனப்பிரச்சினை சம்பந்தமான எந்தத் தீமானம் குறித்தும் சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்கள் கருத்து அறியப்படும்.

- இப்படிச் சொன்னார் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுரத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு ஜனாதிபதி கூறினார்.

திரு. ஜெயவர்த்தன மேலும்சொன்னதாவது:

வடக்கு-கிழக்கு இணைப்பு ஒரு பழைய கதை. புதிய சிந்தனை அல்ல. 1931 இல் டொனமூர் ஆணைக்குழு வடக்கு கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொண்டது.

தனிநாட்டுக் கோரிக்கையும் ஒரு பழைய கதையே. 1920 இல் இருந்து உருவாகி வந்தது இக் கோரிக்கை.

சேர். பொன்னம்பலம் அருணாசலம், சேர். ஜேம்ஸ் பீரிஸ் ஆகியோர் கொண்ட கருத்து வேற்றுமை காரணமாக ஜாதிக சங்கமயத்தில் இருந்து வெளியேறிய போதே தனிநாட்டுக் கோரிக்கை எழுந்தது.

அன்றில் இருந்து தங்களுடைய உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு வருவதாக தமிழர்கள் குறைப்பட்டு வருகின்றனர்.



ஜே. ஆர்.

இனப்பிரச்சினைக்கு எடுக்கப்படும் எந்தத் தீர்வையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி எதிர்க்கும். இது தீவிரவாதிகளுக்கு உதவுவதாக இருக்கும்.

தீவிரவாதிகள் டாக்டர்கள், பல்கலைக் கழக மாணவர் மத்தியிலும் இருக்கின்றனர்.

மக்களின் அனுமதி இன்றி எந்த அரசியல் தீர்வும் அமுல் நடத்தப்பட மாட்டாது.

எப்படியாயினும் இலங்கை சரணடைய மாட்டாது.

இராணுவ பலம் இல்லாவிட்டாலும் இந்தியாவிடம் இலங்கை சரணடையாது.

அமைதி வழியில் இந்தியா உதவமுன்வந்தால் அமைதித் தீர்வைக் காண நாமும் தயாராக இருக்கின்றோம்.

- இப்படி ஜனாதிபதி சொன்னார். (உ-எ)

## அரசமைப்பை - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

'திரிபுவாத நிலையில்' அவற்றை முற்றாக மறந்து விட்டது ஆயுதப் போராட்டம்.

மெய்யியல் துறையைச் சேர்ந்த கலாநிதி கிருஷ்ணராசா அவர்கள் பேசுகையில் கூறியதாவது:-

''ஆயுதப் போராட்டக் காலத்தில் பேச்சுவார்த்தை எவ்விதத்திலும் பலவீனமானது என்று நாம் கருதிவிட முடியாது. ஆனாலும்; பேச்சுவார்த்தைக்குப் போகும் அதே நிலையில் ஆயுதப் போராட்டத்தை வலுப்படுத்துவது பேச்சுவார்த்தையை வென்றெடுக்க உந்து சக்தியாக அமையும் என்பதனையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்'' —என்றார்.

### திருமலைத் துறைமுகம்

பொருளியல் துறை தலைவர் கலாநிதி வே. வித்தியானந்தன் தெரிவித்ததாவது:-

திருமலைத் துறைமுகம் மத்திய அரசாங்கத்தின் கீழ் இருக்க வேண்டும் என்ற அரசின் வாதத்தில் புதுமை எதுவும் இல்லை—இது இந்தியாவிலும். அவ்வாறே நடைமுறையில்உள்ளது. ஆனால் திருமலைத் துறைமுகம் அதனை அண்டிய பகுதியும் மத்திய அரசின் கீழ் இருக்க வேண்டுமென்ற அரசின் நிலைப்பாடே சந்தேகமானது. சூழ்ச்சிமிக்கது அது திருமலையில் தமிழர் பிரதேசத்தினைப் பறிக்கும் தந்திரமயமானது- என்றார். (அ-119)

## பிந்திய யோசனை குறித்து....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திகள் வருவது தடுக்கப்படும் என்றும்— தமிழ் நாட்டில் இருந்து தீவிரவாதிகள் வெளியேற்றப்படுவார்கள் என்றும்—மலையகத்தில் உள்ள இந்தியப் பிரசைகளை திருப்பி எடுத்துக் கொள்ளப்படுவர் என்றும் இந்தியா உறுதியளித்திருப்பதாக அமைச்சர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

### ஹமீத் கூறியது

புதுடில்லியில் நல்ல தொடர்பு வைத்துள்ள நண்பர் ஒருவரே இந்திய யோசனைகளைத் தன்னிடம் தெரிவித்ததாக அமைச்சர் ஹமீத் அக் கூட்டத்தில் கூறினார்.

யோசனைகள் பற்றி விவரித்துச் சொன்ன அமைச்சர் ஹமீத் ஒரு கட்டத்தில்-

'' வடக்கு, கிழக்கு இன்று ஒருவரின் பொறுப்பிலும் இல்லாத பிரதேசம் - '' என்று வர்ணித்தார்.

இந்த வர்ணனைக்கு அமைச்சர் அத்துலத்முதலி கடும் ஆட்சேபனை தெரிவித்தார் என்றும் சொல்லப்படுகின்றது.

தமிழ் நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் உயிருடன் இருக்கும் போதே தீர்வு காணப்பட வேண்டும் என்று அமைச்சர் அத்துலத் முதலி கூட்டத்தில் வற்புறுத்தினாராம்.

அந்த அமைச்சரை ஆதரித்த அமைச்சர் ஹமீது ' தீர்வு கைக்கு எட்டிய தூரத்தில் உள்ளது. சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது''— என்று வலியுறுத்தினார்.

### நிஸங்கா, ரொனி வரவேற்வு

நீதி அமைச்சர் டாக்டர் நிஸங்கா விஜயரத்தினவும் யோசனைகளை ஆதரித்தார்.

'' நிதி நிலை மோசமடைந்துள்ளது. இந்த நிலைமையில் யோசனைகளை ஆராய்ந்து பார்ப்பதில் பிழை ஏதுமில்லை'' இப்படி நிதி அமைச்சர் ரொனி டிமெல் தெரிவித்தார்.

### எதிர்த்தஅமைச்சர்கள்

இந்திய யோசனைகளை அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலி, காமினி ஜயசூரியா, டாக்டர் ரஞ்சித் அத்தபத்து, எம். [illegible] பி. விஜேதுங்க ஆகியோர் கடுமையாக எதிர்த்தனர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு மாகாணசபை அமைக்க அனுமதிப்பது முஸ்லிம்களை ஏமாற்றுவதற்கு ஒப்பாகும் என்று அமைச்சர் முகமது தெரிவித்தார்.

அமைச்சர் தொண்டமான் கவனத்தை ஈர்க்குமளவு மௌனத்தை சாதித்தார்.

### ரணிலின் நிலைப்பாடு

இந்த யோசனைகள் பற்றி நுணுக்கமாக ஆராய கால அவகாசம் தேவை என்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தாராம்.

தீர்மானம் ஏதும் எடுக்கமுன்னர் பிரதமரின் அபிப்பிராயத்தையும் பெற வேண்டும். எந்தத் தீர்மானத்துக்கும் பிரதமரும் பங்காளியாக இருக்க வேண்டும்—இப்படி அமைச்சர் விக்கிரமசிங்க தெரிவித்தார்

''யோசனைகள் ஏற்கப்பட்டால் தீவிரவாதத்தை ஒழிக்க இந்தியா உதவும் என்ற உறுதிமொழியை நம்பமுடியுமா?''—என்று அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து கேட்டார்.

இந்தியாவின் பழைய நடவடிக்கைகள் சந்தேகத்தை எழுப்பியுள்ளது என்று அவர் சொன்னார்.

அமைச்சர் காமினி ஜெயசூரியா பேசுகையில்—

''உள்நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண மூன்றாவது நபரின் உதவியை நாடியதால்தான் இலங்கை முன்னர் பல முறை ஆக்கிரமிக்கப்பட்டது. இதைச் சரித்திரம் சொல்கின்றது'' என்று சொன்னார்.

இந்த அமைச்சர்கள் கூட்டத்துக்குப் பின்னர்தான் கடந்த வியாழனன்று 11 அமைச்சர்கள் இந்திய தூதர் டிக்ஸிற்றைச் சந்தித்து விளக்கம் கேட்டனர்.

இந்த யோசனைகள் பற்றிய விளக்கத்தை திரு. டிக்ஸிற் தெரிவித்ததுடன், யோசனையை ஆதரிக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

இந்த விவரங்களை எல்லாம் கொழும்பில் இருந்து வெளிவரும் 'சண்டே ஐலண்ட்', வெளியிட்டது. (உ-எ)

## தற்போதைய---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மட்டத்தில் ஆராயப்பட்டது.

புதிய யோசனை இறுதி வடிவம் பெற்றபின்னர் இது இலங்கை அரசின் யோசனையாக தமிழர் அமைப்புக்களின் முன் வைக்கப்பட வேண்டும். என்று கொழும்புக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. (உ-எ)

## கத்தோலிக்க - - -

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

காரணம் இனப்பிரச்சினையே. அதற்குத் தீர்வு காணுவதற்கான வழிவகைகளைக் காணுவதில் ஈடுபடுங்கள்— ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்வதை விடுத்து.

'ஆறுதல் கூறப்பட வேண்டியவர்களாக அல்லாமல், ஆறுதல் கூறுபவர்களாக நாம் இருக்க வேண்டும்'

—புனித சவேரியாரின் இந்த போதனையை நீங்கள் பின்பற்ற வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். (உ-எ)

## மலையகத்திற்கும் விமானம்மூலம்உணவு

### இந்தியாவிடம் திட்டம் உண்டு

கொழும்பு, ஜூலை 20

மலை நாட்டில் உள்ள தமிழர் தாக்கப்பட்டால் அங்கும் விமானம் மூலம் உணவும் பொதிகளைப் போடும் திட்டம் இந்தியாவிடப் இருந்ததாம்.

புலனாய்வு அறிக்கைகள் இதனைத் தெரிவித்திருப்பதாக 'சண்டே டைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் உணவுப் பொதிகளை விமானமூலம் போட்ட செயலுக்கு பதிலாக மலையகத் தமிழர் தாக்கப்பட்டிருந்தால் அங்கு உணவு நிவாரணத்தை விமானமூலம் போடும் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு இந்திய விமானப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாம் (உ-எ)

## சந்தோஷத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் பொது மக்களுக்கு பிஸ்கட், இனிப்புபோன்றவற்றை வழங்கியதுடன்—

'இனிமேல் நாங்கள் நல்ல சந்தோஷமாக இருக்கலாம் எனவும் பொது மக்களிடம் தெரிவித்தனராம்.

இதேவேளை பயணிகள் வாகன சோதனைகளும் மிகமிகக் குறைக்கப்பட்டிருந்தன.

பயணிகள் அனைவருடனும் சிப்பாய்கள் அன்பாகப் பழகியதுடன் ஆங்கிலப் பத்திரிகைகளையும் பயணிகளுக்கு வாசித்துக் காட்டினராம். (அ-10)

## இந்தியா....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய யோசனைகள் இதற்கு வழிவகுப்பதாக ''சண்டே டைம்ஸ்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

டிசம்பர் 19 யோசனைகள், நகல் மாகாண சபை சட்டம் ஆகியவற்றுக்கும் புதிய யோசனைகளுக்கும் இடையே அவ்வளவு வேறுபாடுகள் இல்லை.

வடக்கு, கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அரசின் நிலைப்பாட்டுக்கும்—

தமிழ்த்தாயகம் என்ற தமிழர் அமைப்புக்களின் நிலைப்பாட்டுக்கும் இடையேயுள்ள இடைவெளியை நிரப்புவதாகவே புதிய யோசனைகள் அமைந்துள்ளன.

இப்படி 'சண்டே டைம்ஸ்' கூறியிருக்கிறது. (உ-எ)

## பிந்திய யோசனை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசுத் துருப்புக்கள் முகாம்களுக்குள் வைக்கப்பட்டிருக்குமே ஒழிய, தற்போதய முகாம்களில் இருந்து வாபஸ் வாங்கப்படமாட்டார்கள்.

சுதந்திர தேர்தல் ஒன்றுக்கு உறுதியளிக்கு முகமாகவே படைகள் முகாம்களுக்குள் இருக்கும்.

கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுவதைக் கண்காணிக்க, கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்படும்.

குழுவின் தலைவராக பெரும்பாலும் பிரதம நீதியரசர் இருப்பார். (உ-எ)

## பிரேமாவின் ----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கும் பொறுப்பை ஜனாதிபதி ஜெயவர்த்தனவே ஏற்றிருக்கின்றார்.

புதிய யோசனை பற்றி ஆராய்ந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமருடன் பேசும் பொறுப்பைத் தான் ஏற்பதாக ஜனாதிபதி அறிவித்தார்.

—இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய யோசனைகள் குறித்து பல அமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதால் இறுதி முடிவு பிரதமர் நாடு திரும்பிய பின்னரே எடுக்கப்படும் என்று அறிவக்கப்படுகின்றது. (உ-எ)

## வி- பி. சிங் வெளியேற்றம்

புதுடில்லி, ஜூலை 19

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் விஸ்வநாத் பிரதாப் சிங் ஆளும் இந்திராகாங்கிரஸ் கட்சியல் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இத்தகவலை கட்சியின் பொதுச் செயலாளர் ஜி. கருப்பையா மூப்பனார் வெளியிட்டார். (உ-எ)

## இராணுவப் படையின் தலைமைப்----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பணிபுரிவார்.

கூட்டுப்படைத் தளபதி சிரில் ரணதுங்காவுக்கு அடுத்தபடியாக திரு. ஜெரி சில்வா இருப்பார்.

இப்போது அந்தப் பதவியை வகிக்கும் பிரிகேடியர் ஹமில்டன் வனசிங்கா, இராணுவத் தலைமையகத்தில் இராணுவச் செயலாளர் பதவியை ஏற்பார்.

வன்னி இணைப்பதிகாரியான பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ வன்னியை தலைமையலுவலகமாகக் கொண்டு பயிற்சிப்பிரிவின் இயக்குநர் பதவியையும் வகிப்பார்.

பிரிகேடியர் சி. எச். பெர்னண்டோ செயல் பிரிவு இயக்குநராக நியமிக்கப் பட்டிருக்கின்றார்.

இம் மாற்றங்கள் எந்த நேரமும் அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப் படுகின்றது. (உ-எ)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர் - து அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 20-07-1987.

P ted and Published by New Uthayan Publi ions (Pvt) Ltd at 292/2 Navalar Road Jaffna on Monday July 20 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org